## தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 23.06.2020 . | 1) தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பாளையங்கோட்டை ரோடு மேற்கு ஒப்புதல் பெறப்பட்ட அண்ணா விரிவு அபிவிருத்தி திட்டம் வார்டு சி, பிளாக் 32, நகரளவை எண்கள் 2/2 A 3, 12/1 ல் 3.55 ஏக்கர் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா வரைபடம் (Road Pattern) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். ந.க.எண். 20628/2019/TC/P6 நாள் 28.2.2020ன் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மூலை முடுக்குகள் மற்றும் பூங்கா இடம் உள்ளாட்சி பொது ஒதுக்கீடு 54.51 ச.மீ. (0.57%) பரப்பளவு இடம் 11 எண்ணிக்கையிலான தெருவிளக்கு மின்கம்பங்கள் மாநகராட்சியின் பராமரிப்புக்கு வழங்குவதற்கான பதிவு செய்யப்பட்ட தான பத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்ய மனுதாரர் திரு. ஜி. வெற்றிவேல் அவர்கள் 8.6.2020ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார்.<br>மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மூலை முடுக்குகள், பூங்கா இடம் உள்ளாட்சி பொது ஒதுக்கீடு குடிநீர் குழாய்கள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவற்றினை மாநகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைக்க தானபத்திரம் பதிவு செய்து தர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். எப்1/926/2020மே.ம. | 102) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு மண்டல பகுதியில் உள்ள ஜின்பாக்டரி ரோடு மாநகராட்சி பள்ளி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 12.03.2020 அன்று ஏலம் நடைபெற்றதில் கீழ்க்கண்டுள்ள விவரப்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளனர். | 103) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| வ.எண் | பணிகளின் விவரம் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ளவர் விவரம் | உயர்ந்தபட்ச ஏக்கேள்வி தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | ஜின்பேக்டரி ரோடு பழுதடைந்த மாநகராட்சி பள்ளி கட்டிடம் இடித்து அப்புறப்படுத்தும் பணி | பி.வேல்முருகன் | ரூ.3,55,000.00 |

| | | |
|---|---|---|
| மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்விதாரர் ஏலக்கேள்வி தொகை, மற்றும் ஜிஎஸ்டி வரி ஆகியவற்றினை செலுத்தியுள்ளார். எனவே மேற்படி ஏலத்தினை முடிவு செய்திட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை உள்ளூர் சந்தை விலையை விட கூடுதலாக உள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை அங்கீகரிக்கலாம். ந.க.எண். **3143/இ5/2018** | | |
| | **3)** இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் திரு.த. இசக்கிமுத்து என்பவர் ஆய்வக நுட்புனராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் ஒரு மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டம் **169** ( H ) ( C ) ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE ன் படியும் திரு.த. இசக்கிமுத்து என்பவருக்கு **2020–2021** முதல் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ**2/637/2020**/மே.ம | **104)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **4)**இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் திரு.பா. இராமலிங்கம் என்பவர் ஆய்வக நுட்புனராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் ஒரு மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டம் **169** ( H ) ( C ) ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE ன் படியும் திரு.த. இசக்கிமுத்து என்பவருக்கு **2020–2021** முதல் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ**2/636/2020**/மே.ம | **105)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **5)** இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அகியவற்றின் குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்வதில் நிர்வாக இடர்பாடுகள் ஏற்பட்டு வருகிறது. ஆகையால் மேற்படி குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை | **106)**அலுவலகக் குறிப்பு **1** ஒப்புதல் வழங்கப்பட்டது.<br>அலுவலகக் குறிப்பு **2** ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கருத்தில் கொண்டு மேற்படி குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிகளுக்கு Electrician Pump Operator Lab attender Technical Helper Turn cock Line Man Skilled fitter ஆகிய நிலையில் மொத்தம் 56 மனித ஆற்றல்கள் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் மூலம் ஈடுபடுத்தவும் இப்பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட தினக்கூலி (PWD SOR/ District Collector Approval Rate) ஊதிய விகிதத்தில் 01.04.2020 முதல் ஓர் ஆண்டிற்கு தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ளவும் ஓராண்டு காலத்திற்கு இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.100.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2) மேற்படி பணியாளர்களுக்கு ஏப்ரல், மே 2020 மாத ஊதியம் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கிடவும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 3874/18/இ2/ சிஎல்சி | |
| | 6)மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீர்மிகு நகரம் " (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீர்மிகு நகரம் " (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (மாந2) அரசாணை எண் (MALL) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br><br>அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட் லிமிட் டெட் அவர்களின் தலைமையில் 22.05.2020 அன்று நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கைகளில கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | 107) அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணிகளின் பெயர் | நிர்வாக குழு கூட்ட எண் / நாள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) |
|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் மாநகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் நகர் (சுந்தரவேல்புரம்) பகுதியில் STEM PARK (Science Technology. Engineering Mathematics park) அமைக்கும் பணி | 08.04<br>22.05.2020 | 14.22 |
| 2 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் மாநகராட்சிக்குட்பட்ட அம்பேத்கர்நகர் (சுந்தரவேல்புரம்) பகுதியில் City learning Centre அமைக்கும் பணி | 08.05<br>22.05.2020 | 14.65 |
| 3 | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் உள்ள தெற்கு காட்டன் ரோடு பார்டர் பஜார் மற்றும் தச்சர் தெரு பகுதியில் வணிக வளாகம் கட்டும் பணி | 08.06<br>22.05.2020 | 10.11 |

| | | | |
|---|---|---|---|
| 4 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப் பகுதியில் உள்ள பாரதிநகர், எஸ்.பி.எஸ். நகர் கதிர்வேல் நகர் ஏ மற்றும் பி. முருகேசன் நகர், கிருபைநகர், செல்சீனி நகர் மற்றும் ரோச் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள பூங்காக்கள் அபிவிருத்தி பணிகள் | 08.07<br>22.5.2020 | 13.25 |
| 5 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சிப் பகுதியில் உள்ள தனசேகரநகர், காந்தி நகர், ஓம் சாந்தி நகர் மற்றும் பாலையபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள பூங்காக்கள் அபிவிருத்தி பணிகள் | 08.08<br>22.05.2020 | 10.04 |
| 6 | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் பகுதியில் இருசக்கர வாகனம் மற்றும் சைக்கிள் நிறுத்துமிடத்தின் மேற்கூரை 225Kwp திறன் கொண்ட சூரிய மின் தகடு சோலார் அமைக்கும் பணி | 08.09<br>22.05.2020 | 3.35 |
| 7 | Construction of Smart Road at Thanthi Office Road, Sandhai Road. Toovipuram 3rd Street and Briyant Nagar 1st street (Phase –II Package-I) | 08.11<br>22.05.2020 | 14.85 |
| 8 | Construction of Smart Road at Toovipuram 5th Street Polepettau 60 Feet Road and Kurinji Nagar Main Road (Phase II Package II) | 08.12<br>22.05.2020 | 14.90 |
| 9 | Construction of Smart Road at North Beach Road (Phase – II Package-III) | 08.13<br>22/05/2020 | 10.75 |
| 10 | சுப்பையா முதலியார்புரம் முதல் மற்றும் தொடர்ச்சியாக இரண்டாம் நிலை மழைநீர் வடிகால் இணைப்பு பணியான சுப்பையாபுரம் மாசில்லாமணிபுரம் பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (தொகுப்பு – 3 சிப்பம் – 1) | 08.14<br>22.05.2020 | 14.50 |
| 11 | பிரையண்ட் நகர் மேற்கு மெயின் தெரு கிழக்கு பகுதி மற்றும் தொடர்ச்சியாக இரண்டாம் நிலை மழைநீர் வடிகால் இணைப்பு பணியான சிதம்பரநகர் பிரையண்ட் நகர் மத்தி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (தொகுப்பு – 3 சிப்பம் – 3) | 08.15<br>22.05.2020 | 9.25 |
| 12 | பிரையண்ட் நகர் மேற்கு மெயின் தெரு கிழக்கு பகுதி மற்றும் தொடர்ச்சியாக இரண்டாம் நிலை மழைநீர் வடிகால் இணைப்பு பணியான சிதம்பர நகர் பிரையண்ட் நகர் மத்தி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (தொகுப்பு – 3 சிப்பம் – 3) | 08. 16<br>22.05.2020 | 10.25 |
| 13 | மேக் கார்டன், குமரன் நகர் சத்யா நகர் அம்பேத்கர் நகர் மற்றும் சுந்தரவேல்புரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (தொகுப்பு – 3 சிப்பம்–4) | 18.17 /<br>22.05.2020 | 11.50 |
| | எனவே தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் மேற்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் மேறகொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/3209/2015 | | |

| | | |
|---|---|---|
| | 7)தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள முத்துநகர் பூங்காவிற்கு மாநகரின் பல்வேறு பகுதியிலிருந்து பொது மக்கள் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் வயோதிகர்கள் பெருமளவில் வருகை தந்து பொழுது போக்குவதற்கும், நடைபயிற்சி மேற்கொள்ளவும் அங்குள்ள விளையாட்டு உபகரணங்களில் விளையாடியும் பொழுது கழித்து மகிழ்ந்து வருகின்றனர்.<br>இந்நிலையில் மேற்படி பூங்காவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளவும் சிறிய அளவில் கடைகள் அமைத்து அதன் மூலம் மாநகராட்சிக்கு வருவாய் இட்டும் வகையில் Kiosk Shop அமைக்கவும் மேற்படி பூங்காவிற்கு வரும் வாகனங்கள் வடக்கு துறைமுகச் சாலையில் செல்தற்கு ஏதுவாக சிறுபாலம் அமைத்தல் போன்ற கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள பணிகள் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக குழு கூட்ட அனுமதி எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. | 108) பதிவு செய்யப் பட்டது. |
| வ.எண் | பணிகள் விபரம் | நிர்வாக அனுமதி வழங்கப்படும் தொகை (ரூ. லட்சம்) |
| 1 | தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு துறைமுக சாலை முத்துநகர் கடற்கரை பூங்காவில் ஸ்கேட்டிங் மைதானம் மேம்படுத்தும் பணி | 15.00 |
| 2 | தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு துறைமுக சாலையில் உள்ள கரிக்கலம் காலனி பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 25.00 |
| 3 | தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு துறைமுக சாலை முத்துநகர் கடற்கரை பூங்கா மெம்படுத்தும் பணியில் கடைகள் கட்டும் (Kiosk Shop ) பணி | 36.00 |
| 4 | தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள முத்துநகர் கடற்கரை பூங்காவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளல். | 18.50 |
| | மொத்தம் | 94.50 |
| | மேற்படி பட்டியலில் கண்டுள்ள முத்து நகர் பூங்கா தொடர்பான பணிகள் ரூ. 94.50 இலட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு உரிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன.<br>மேலாண்மை இயக்குநர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட் அவர்களால் மேற்கண்ட விபரப்படி முடிக்கப்பட்ட பணிகளுக்கு அனுமதி எதிர்நோக்கி மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட் அவர்களின் நிர்வாகக் குழு கூட்ட நடவடிக்கைகள் எண். 08.18 நாள் 22.05.2019இல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட நிர்வாக குழு கூட்ட நடவடிக்கைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பதிவு செய்யலாம். இ1/3209/2015 (MNP) | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.23.06.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி